## இனிமையான குழந்தைகளே, இரவில் விழித்திருந்து வருமானத்தை சேமியுங்கள், அமிர்தவேளையில் எழக்கூடிய பழக்கத்தை ஏற்படுத்துங்கள்

கேள்வி: ஞானத்தில் வந்ததும் ஏறக் கூடிய போதையை நிலையாக வைத்திருப்பதற்கான விதி என்ன?

பதில்: புதிய புதியவர்கள் ஞானத்தில் வரும்போது மிகவும் போதை ஏறுகிறது. அதே சமயம் தனக்குத் தானே பல உறுதிமொழிகளும் எடுக்கின்றனர். பாபா சொல்கிறார் அந்த உறுதி மொழி களை டைரியில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள், பிறகு அதனை மீண்டும் மீண்டும் எடுத்து பார்த்துக் கொள்ளுங்கள், அப்போது அந்த போதை நிலையாக இருக்கும். இல்லாவிட்டால் மாயையின் புயல்கள் வரும்போது போதை இறங்கி விடும். போகப் போக ஏதாவது தவறு ஏற்பட்டு விட்டால் உடனடியாக பாபாவிடம் சொல்லி விட்டு லேசாகி விடுங்கள். பிறகு மீண்டும் அந்த தவறு நடக்கக் கூடாது. இல்லாவிட்டால் அவை அதிகரித்தபடி இருக்கும்.

பாடல்: துக்கமான எங்கள் மீது இரக்கம் காட்டுங்கள், தாய் தந்தையே. . .

ஓம் சாந்தி. இந்த பாடல் மிகவும் நன்றாக இருக்கிறது. ஏனென்றால் முழு உலகத்திலுமே துக்கம் நிறைந்திருக்கிறது. மேலும் நீங்கள் தாய் தந்தையாக இருக்கிறீர்கள் என்று பகவானை நினைவு செய்துக்கொண்டே இருக்கின்றனர்..... உங்களின் கருணை மூலம் அளவற்ற சுகம் கிடைக்கிறது. இந்த சமயம் முழு உலகமும் துக்கமானதாக உள்ளது. ஆகையால் தான் தந்தையை நினைவு செய்கின்றனர், எனவே தாயையும் கண்டிப்பாக நினைவு செய்வார்கள். இந்தப் பாடல் மிகவும் நன்றாக இருக்கிறது. தாய் தந்தையிடம் பிறவி எடுக்கும்போது நமக்கு ஒரு வினாடியில் ஆஸ்தி கிடைக்கிறது என நீங்கள் அறிவீர்கள். பாரதத்தில் இந்த பாடல் உள்ளது. குழந்தைகள் இப்போது முன்னால் அமர்ந்திருக்கின்றனர். ஜகத்அம்பா இருக்கிறார் எனும் போது கண்டிப்பாக ஜகத்பிதாவும் இருப்பார். அவருக்கும் மேலாக யாராவது இருப்பார்கள். ஏனென்றால் இந்த சமயத்தில் சுகதாமத்தின் ஆஸ்தி கிடைக்க வேண்டும். ஆக, சுகதாமத்தின் ஸ்தாபனை செய்யக் கூடிய தாய் தந்தையும் தேவை. சில தாய் தந்தையர் செல்வந்தராக இருப்பார்கள் .அவர்களுக்கு முதல் தரமான வீடு இருக்கும். சில தாய் தந்தையர் ஏழையாக இருப்பார்கள், வீடும் அதற்குத் தகுந்தாற்போல இருக்கும். சத்யுகத்தில் பாருங்கள் இராதா கிருஷ்ணர் இருக்கின்றனர், இவர்களுக்கு முதன் முதலாக இராஜ்யம் கிடைத்தது. இராதை கண்டிப்பாக ஒரு இராஜாவிடம் பிறவி எடுப்பார் அப்போது இராஜ குமாரியாக இருப்பார். மேலும் ஸ்ரீகிருஷ்ணர் இராஜகுமாரனாக இருப்பார். பிறகு அவர்கள் திருமணம் செய்ய வேண்டியிருக் கும். இது மிகச் சரியானதாகும். தாய் தந்தை இப்போது தெய்வீக இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கின்றனர். தேவி தேவதைகள் சூரிய வம்சத்தின் மகாராஜா, மகாராணியாக இருந்தனர். இவர்களுக்கு இந்த பதவி எப்படி கிடைத்தது, ராமன் சீதைக்கு சந்திர வம்சத்தின் இராஜ்யம் எப்படி கிடைத்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். கலியுகத்தின் கடைசியில் இராஜ்யம் எதுவும் இல்லை. இது படிப்பின் மூலம் கிடைக்கும் இராஜ்யம் ஆகும். அந்த படிப்பின் மூலம் இன்ஜினியர், வக்கீல் ஆவது போலாகும். இந்தப் படிப்பின் மூலம் இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவாக ஆக

வேண்டும். ஒரே ஒரு தந்தைதான் இராஜ்ய பதவி அடைவதற்கான இராஜ யோகத்தைக் கற்றுக் கொடுக்கிறார். இது போல இராஜ்ய பதவி அடைவதற்கான முயற்சியை வேறு எந்த பல்கலைக் கழகத்திலும் கற்றுக் கொடுப்பதில்லை. இதனுடைய பெயரே கீதா பாட சாலை ஆகும். கீதையின் மூலம் தான் இராஜ்ய பதவி கிடைக்கிறது. வேதங்கள், உபநிடதங்கள் மூலமாக என்ன பதவி கிடைக்கிறது? இராஜ யோகத்தை பகவானே வந்து கற்றுக் கொடுக்கிறார். எவ்வளவு சகஜமான விஷயமாக உள்ளது. இது நேற்றைய விஷய மாகும். இலட்சுமி நாராயணரின் இராஜ்யம் இருந்தது, கிறிஸ்துவுக்கு 3000 வருடங்களுக்கு முன்பு தேவதைகளின் இராஜ்யம் இருந்தது என்று பாடவும் பட்டுள்ளது. அவர்களுக்கு எப்படி இராஜ்யம் கிடைத்தது? கண்டிப்பாக பகவான்தான் வினாசத்திற்கும் முன்பாக கற்றுத் தந்திருக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் வினாசம் ஏற்பட்டிருக்க வேண்டும். பிறகு இராஜயோகத்தின் மூலம் சத்யுகத்தில் இராஜ்ய பதவியை அடைந்தார்கள். இது சங்கம யுகமாகும்.

இந்த நேரத்தில் தான் ஒரு வினாடியில் சூரிய வம்சத்தின், சந்திர வம்சத்தின் இராஜ்யம் கிடைக் கிறது, வந்து புரிந்து கொள்ளுங்கள் என்று நீங்கள் எழுத முடியும். சித்திரங்கள் மூலமாக நீங்கள் நன்றாகப் புரிய வைக்க முடியும். புரிய வைப்பவர் புத்திசாலியாக இருக்க வேண்டும். பிரம்மா குமார், குமாரிகள் சிவனுடைய பேரன், பேத்திகள் ஆவார்கள். ஆயினும் பாபா சொல்கிறார் என்னை கோடியில் ஒரு சிலரே தெரிந்து கொள்கின்றனர், மற்றும் என்னிடமிருந்து ஆஸ்தியை எடுக்கின்றனர். ஒரு வினாடியில் ஜீவன் முக்தியை அடைகின்றனர். பிறகு ஜீவன் முக்தியில் உயர் பதவியை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவை அனைத்தையும் புரிய வைப் பதற்கு மேளா (திருவிழா), கண்காட்சிகள் நடத்தப் படுகின்றன. சிந்தனை ஓடுகிறது, புதுப் புது கருத்துகள் வெளிப்படுகின்றன. நாளுக்கு நாள் சகஜமான சித்திரங்கள் உருவாக்கப் படுகின்றன மற்றும் அனைத்தும் நாடகத்தின் படி தான் உருவாக்கப்படுகின்றன. கல்பத்திற்கு முன்பு என்ன நடந்ததோ அதுதான் நடக்க வேண்டும்.இந்த கண்காட்சி 5000 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் இப்போது ஏற்படுத்தப் பட்டுள்ளது, மீண்டும் கல்பத்திற்குப் பிறகு வைக்கப்படும் இப்படி வேறு யாரும் எழுத முடியாது. ஒரே ஒரு முறை கல்பத்தின் சங்கமயுகத்தில் இந்தக் கண்காட்சிகள் நடக்கின்றன. அதாவது 5000 வருடங்களுக்குப் பிறகு இந்த கண்காட்சி பரமபிதா பரமாத்மாவிட மிருந்து ஒரு வினாடியில் ஜீவன்முக்தியை அடைவதற்காக, இதைப் புரிய வைப்பதற்காக உருவாக்கப்படுகிறது. இவையனைத்தும் பல நாடுகளுக்கும் செல்லும். புதுப்புது கருத்துகளை பாபா புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். புது கருத்துகள் சேர்க்கப்பட்டும், திருத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டும் இருக்கும். அந்த மனிதர்கள் இராமாயணம் போன்றவற்றை அச்சடிக்கும்போது அதையே மீண்டும் அச்சடிக்கின்றனர். ஆகையால் நம்மிடம் கூறுகின்றனர் முன்பு நீங்கள் வேறு என்னவோ எழுதினீர்கள், இப்போது வேறு என்னவோ எழுதிக் கொண்டிருக் கிறீர்கள். நான் உங்களுக்கு தினம் தோறும் புதிய கருத்துகளை கூறுகிறேன் என பாபா கூறுகிறார். அனைத்தையும் ஒரே நேரத்தில் சொல்வதில்லை. யுத்த மைதானத்தில் கீதை சொன்னதாக அவர்கள் எழுதி விட்டனர். 18 அத்தியாயங்களாக கீதை உருவாக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்தில் புத்திசாலியாக இருப்பவர்கள் அரை மணி நேரத்தில் சுலோகங்களை மனனம் செய்து விடுவார்கள். கீதைதான் முக்கியமானது. மற்ற படி பாகவதத்தில்

கதைகள் உள்ளன. கீதையைத்தான் சமஸ்கிருதத்தில் உருவாக்கியிருக் கின்றனர். சிறிய கீதையை சமஸ்கிருதத் தில் உருவாக்கியுள்ளனர். ஞானக்கடல் பாபா அவ்வளவு ஞானத்தைக் கொடுத்திருக்கின்றார், கடலை மையாக்கி, காட்டு மரங்களை பேனாவாக்கி, முழு உலகத்தை காகிதமாக ஆக்கினாலும் எழுதி முடிக்க முடியாது. அவர்களோ 18 அத்தியாயங்களில் முடித்து விட்டனர். ஆனால் அப்படி எதுவும் கிடையாது. சமஸ்கிருதத்தின் விஷயமும் கிடையாது. ஹிந்தி மொழிதான் பயன்படுத்தப்படுகிறது. நிறைய மொழிகள் உள்ளன. அனைத்து மொழிகளையும் ஒருவரே கற்றுக் கொள்ள முடியாது. முயற்சி செய்து 5 முதல் 6 மொழிகளை கற்றுக் கொள்ள முடியும், அவர்களுக்கு நிறைய மதிப்பு கொடுக்கப்படுகிறது. அனைத்து மொழிகளிலும் பகவான் புரிய வைப்பாரா என்ன? அவர் ஹிந்தியில் தான் புரிய வைக்கிறார். ஹிந்தியை எப்படி சாமானியர்கள் அனைவரும் தெரிந்திருப்பது போல ஆங்கிலத்தையும் சாமானியர்கள் தெரிந்திருக்கின்றனர். குழந்தைகளாகிய உங்களுக்கு பாபா ஹிந்தியில் கற்றுத் தருகிறார். பக்தர்களுக்கு பகவான் வந்து பக்தியின் பலனைக் கொடுக்கிறார். நிறைய பக்தர்கள் இருக்கின்றனர், பகவான் ஒருவரே. பதித பாவனரே வாருங்கள் என்றும் சொல்கின்றனர். பகவானே வாருங்கள் என சொல்வ தில்லை. அனைவருடைய தந்தை ஒருவரே ஆவார். அனைவருடைய இறை தந்தை ஒருவரே ஆவார். அவர் படைப்பவர், குழந்தைகளின் சுகத்திற்காக படைப்பை படைக்கிறார். தந்தை குழந்தைகளுக்கு சுகத்தைக் கொடுக்க வருகிறார். இறைத்தந்தை சொர்க்கத்தை படைக்கிறார் மற்றும் யாரை சொர்க்கத்தின் எஜமானாக ஆக்குகிறாரோ அவர்கள் பகவான் பகவதி என அழைக்கப் படுகின்றனர். ஆனால் அனைவரையும் அப்படி சொல்ல முடியாது. இறைத்தந்தை ஆதாம் ஏவாள் மூலமாக எப்படி உலகத்தைப் படைக்கிறார். இவை மிக மறைமுகமான விஷயங்களாகும். இறைவன் தனிப்பட்டவர். இதனை மெது மெதுவாகப் புரிந்து கொள்வார்கள். மரம் வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும். பாரதத்திற்குத்தான் முக்தி, ஜீவன் முக்தி கிடைக்கிறது. சுகதாமமாக பாரதம் உருவாகிறது.முதலில் பாரதம் தான் பழமையான கண்டமாக இருந்தது, அங்கே தேவி தேவதைகள் இராஜ்யம் செய் திருந்தனர். அதன் பிறகு இஸ்லாம், பௌத்த கண்டங்கள் ஸ்தாபனை ஆகின. புரிந்து கொள்வது மிகவும் எளிதானது. எந்த சமயத்தில் எந்த நாற்று நடப்பட வேண்டுமோ அதுதான் நடப்படும்.

பாருங்கள், எப்படி எப்படியெல்லாம் கடிதம் எழுதுகின்றனர் பாபா நாங்கள் 4 தினங் களின் குழந்தைகள். நாங்கள் உங்களைப் புரிந்து கொண்டு விட்டோம். சிலரோ எவ்வளவு வருடங் களாக வந்து கொண்டிருக்கின்றனர், ஆனால் கடிதமே எழுதுவதில்லை. சிலரோ உடனே கடிதம் எழுதுகின்றனர். மேலும் செல்லச் செல்ல மாயையின் புயல்கள் நிறைய வரும். புயல்களால் பழைய இலைகளும் உதிர்ந்து விடுகின்றன. புதியவர்களுக்கு முதன் முதலில் குஷியின் அளவு நிறைய ஏறுகின்றது பாபா நாங்கள் உங்களுடையவர்களாகி இருப்போம். ஆனால் மாயையும் குறைந்ததல்ல. உறுதி மொழி கொடுக்கும்போது, நாம் என்னென்ன உறுதி மொழிகள் கொடுத் தோம் என தினசரி குறிப்பு புத்தகத்தில் (டைரி) எழுதுங்கள். பலர் உறுதி மொழி கொடுத்துவிட்டு டைரியை பார்ப்பதே கிடையாது. இதனால் என்ன லாபம்? நமக்குப் பின் சந்ததியினர் படிப்பார் கள் என்பதல்ல.இங்கே பேரன் பேத்தி கள் யாரும் இருக்கப் போவதில்லை. யார் எதை எடுத்தார் களோ அவ்வளவு தான், படிக்கா விட்டால் பக்குவமற்றவராகி நின்று

விடுவார்கள். கொஞ்சம் தவறு நடந்தாலும் சொல்ல வேண்டும், இல்லாவிட்டால் அது வளர்ச்சியடைந்து கொண்டே போகும். ஒரு கதையும் இருக்கிறது தாயின் காதைப் பிடித்து நீ எனக்கு முதலிலேயே ஏன் சொல்லவில்லை? முன்னாலேயே சொல்லியிருந்தால் எனக்கு சிறைவாசம் கிடைத்திருக்காது என சொன்னதாக கதை உள்ளது. இவையனைத்தும் உதாரணங்கள் ஆகும். ஒரு போதும் திருடக் கூடாது. இல்லாவிட்டால் திருடுவது பழக்கமாக ஆகிவிடும், மேலும் தர்மராஜாவிடம் நிறைய தண்டனைகள் அடைய வேண்டியிருக்கும். இப்போது தந்தையிடம் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு ஆஸ்தியை எடுத்துக் கொள்ளுங்கள். உலக இராஜ்யத்தை தந்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார், வேறு என்ன கொடுப்பது? வேறு ஏதாவது இருக்கிறதா என்ன? இப்போது உங்களுடைய வாழ்க்கை பிச்சைக்கார வாழ்க்கையாகும், (பெக்கர் பார்ட்) ஆகையால் ஆத்ம அபிமானி ஆக வேண்டும். தேகத்துடன் முழு உலகையும் நாம் மறக்கிறோம். பேராசை இருக்கக் கூடாது. எது கிடைக்கிறதோ அதுவே நல்லது. கேட்டுப் பெறுவதை விட இறப்பது மேல் என சொல்லப்படுகிறது. சிவபாபாவின் களஞ்சியத்திலிருந்து அனைத்தும் கிடைக்கிறது, அமிர்த வேளையில் தாமாகவே எழக் கூடிய பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இரவில் விழித்திருந்து வருமானத்தை சேமியுங்கள். சிவ பாபா இந்த அனுபவம் மிக்க சரீரத்தை எடுத்திருக்கிறார். அதுவும் ரத்தினம், இதுவும் ஞான ரத்தினமாகும். இன்றைய நாட்களில் போலி வைரங்கள் எவ்வளவு வெளிப்பட்டுள்ளன, கேட்கவே வேண்டாம். படங்களை வைத்துப் புரிய வைப்பது மிகவும் எளிதாகும். ஒரு வினாடியில் தந்தையிடம் வந்து ஆஸ்தியை எடுத்துக் கொள்ளுங்கள். மேலே பாபா, இவர்கள் பிரம்மாகுமார், குமாரிகள் ஆவர். தந்தையுடையவர் களாக ஆகியதும் ஜீவன்முக்தியின் ஆஸ்தி கிடைக்கவே செய்கிறது. மற்றபடி நாம் முயற்சி செய்வது உயர் பதவியை அடைவதற்காகத்தான். பரமபிதா பரமாத்மா பிரம்மாவின் மூலம் மனித சிருஷ்டியை படைக்கிறார். பந்தனத்திலிருப்பவர்கள் சொல்கின்றனர் பாபா நாங்கள் உங்களை மட்டுமே நினைவு செய்கிறோம். நாங்கள் உங்களை சந்திக்கப் போவதில்லை, ஆனால் உங்களிடமிருந்து ஆஸ்தியை கண்டிப்பாக எடுப்போம். எவ்வளவு அதிசயம். எந்தளவு தாக்கம் ஏற்படுமோ, அந்தளவு பந்தனமும் விடுபட்டுக் கொண்டே செல்லும். நிறைய பேர் தம் கணவருக்கே குருவாக ஆகிவிடு கின்றனர். அந்த பட்டியல் வெளிப்படும் எவ்வளவு மனைவி கள் கணவர்களுக்கு குரு ஆகியுள்ளனர் என்று பிறகு கணவரும் எழுதுகின்றார் இவர் எனக்கு ஞானம் கொடுத்தார், அதனால் இவர் என்னுடைய குரு ஆவார். கணவர் சொல்கிறார் மனைவி என்னுடைய குரு ஆவார். இப்படி யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். மாதா குருவின்றி யாருடைய முன்னேற்றமும் ஏற்பட முடியாது. கலசம் ஜகத்மாதாவிற்க்கு கிடைக்கிறது. ஆக ஜகத் மாதா தான் குரு ஆனார் அல்லவா. இன்றைய நாட்களில் பெண்களுக்கு நிறைய மரியாதை கொடுக்கின்றனர். மாதா குரு இல்லாமல் முக்தி, ஜீவன் முக்தி கிடைக்க முடியாது என தந்தை கூட சொல்கிறார்.ஆக, மாதாவின் (தாயின்) மூலம் தத்தெடுக்கப்படும்போது ஜீவன் முக்தி கிடைக்கும். மாதாவை குரு என புரிந்து கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு தன்னைப் பற்றிய அகங்காரம் இருக்கக் கூடாது, மாதர்களுக்கு (தாய்மார் களுக்கு) உரிய மரியாதை கொடுக்க வேண்டும். அவர்களைப் பின்பற்றி செல்ல வேண்டும், தேக அபிமானம் இருக்கக் கூடாது. தன்னை அகங்காரமற்றவர் என புரிந்து கொள்ள வேண்டும். தந்தை கூட தன்னை நிராகார்

என புரிந்து கொள்கிறார். நான் நிராகாரமானவன் மற்றும் சாகாரமானவன் என நீங்கள் சொல்வீர்கள். மருத்துவமனை மற்றும் பல்கலைக்கழகம் என எழுதுவதைப் போலாகும்.இந்த அனைத்து விசயங்களும் புரிய வைப்பதற்காக சொல்லப்படுகிறது. அனைவரும் ஒரேமாதிரி யாக தாரணை செய்வதில்லை. முயற்சி செய்து தாரணை செய்ய வேண்டும் மற்றும் செய்விக்க வேண்டும். கேட்டீர்கள் மற்றும் மற்றவர் களுக்கு சொல்கின்றீர்கள், உடனடி தானம் மகா புண்ணியம் ஆகும். ஞான செல்வத்தை தானம் செய்யவில்லை என்றால் எப்படி செல்வந்தர் ஆவீர்கள்.

நீங்கள் அனைவரையும் விட அதிக பேராசைக்காரர்கள், முழு உலகத்தின் எஜமான் ஆவது எவ்வளவு பெரிய ஆசை. ஒவ்வொருவரையும் சுகம் நிறைந்தவராக, அமைதி நிறைந்த வராக ஆக்க வேண்டும்.மனிதர்களை கலியுகத்தின் கீழான நிலையிலிருந்து சத்யுகத்தின் உயர்ந்த நிலைக்கு மாற்ற வேண்டும். பாரதத்தில் தேவதைகள் இருந்தனர், இப்போது இல்லை. மீண்டும் தேவதைகள் வருவார்கள், அதை சொர்க்கம் என்று சொல்லப்படுகிறது. பாரடைஸ் வார்த்தை மிக நன்றாக உள்ளது. நாம் சொர்க்கத்தின் எஜமான் ஆவதற்கான முயற்சி செய்து கொண்டிருக் கிறோம். ஒரு தந்தையைத் தவிர மற்ற அனைத்தையும் மறந்துவிட வேண்டும். அனைவர் மீதான பற்றையும் நீக்க வேண்டும். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டசேவாதாரி குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. இந்த பிச்சைக்கார வாழ்க்கையில் முழுமையாக ஆத்ம அபிமானி ஆக வேண்டும். எந்தப் பொருள் மீதும் அதிக பேராசை வைக்கக்கூடாது. எது கிடைத்ததோ, அது நல்லது. கேட்பதை விட இறப்பதே மேலானது.

2. தன்னுடைய அகங்காரம் இல்லாமல் மாதர்களுக்கு தகுந்த மதிப்பளிக்க வேண்டும். தந்தைக்கு சமமாக நிராகாரி மற்றும் நிரகங்காரி (அகங்காரமற்றவர்) ஆக வேண்டும். ஞான செல்வத்தை தானம் செய்ய வேண்டும்.

வரதானம் : நான்கு பாடங்களையும் தனது சொரூபத்தில் கொண்டு வரக் கூடிய உலகிற்கு நன்மை செய்பவர் (விஷ்வ கல்யாணகாரி) ஆகுக.

படிப்பில் நான்கு பாடங்கள் இருக்கின்றன. அவைகளுக்குள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இருக்கிறது. யார் ஞானி ஆத்மாவாக இருக்கிறாரோ, அவர் அவசியம் யோகி ஆத்மாவாகவும் இருப்பார். மேலும் யார் ஞான, யோகத்தை தனது குணமாக ஆக்கிக் கொண்டாரோ, அவரது காரியம் இயற்கையாகவே யோகயுக்த் அல்லது சிரேஷ்டமாக இருக்கும். சுபாவ, சன்ஸ்காரம் தாரணை சொரூமாக இருக்கும். யாரிடத்தில் இந்த மூன்று பாடங்களின் அனுபவ பொக்கிஷம் இருக்கிறதோ, அவர் இயற்கையாகவே மாஸ்டர் வள்ளல் அதாவது சேவாதாரியாக ஆகிவிடு வார். யார் இந்த நான்கு பாடங்களிலும் நம்பர் ஒன் ஆகிறார்களோ, அவர் தான் உலகிற்கு நன்மை செய்பவர் என்று கூறப்படுகின்றார்.

சுலோகன்: மாயாவின் மிகப் பெரிய ரூபத்தின் விளையாட்டை சாட்சியாகப் பார்த்தீர்கள் எனில் பயமற்று இருப்பீர்கள்.

விலைமதிப்பற்ற ஞான இரத்தினம் (தாதிகளின் பழைய டைரியிலிருந்து)

ஞானத்தை உணருதலின் சுகமே அமைதி தான் அதாவது விகார எண்ணங்கள் இல்லாத நிலைக்குச் செல்வதாகும். உள்ளே செல்வதனால் அமைதி ரூபமாக ஆகிவிடுகிறது. இந்த அழிவற்ற ஞானத்தின் மூலம் சம்பூர்ண அமைதிக்கான இடத்திற்கு சென்றடைந்து விடுகிறீர்கள். அமைதி அதாவது யோக நிலையை தாரணை செய்வதன் மூலம் யோகத்தின் மிகப் பிரகாச மான ஒளி வெளிப்படுகிறது. யார் இரவு, பகல் இந்த இனிய யோக நிலையில் இருப்பார்களோ, அவர்களுக்கு அளவற்ற குஷி ஏற்படும். அவர்களது அனைத்து எல்லைக்குட்பட்ட பந்தனங்கள் துண்டிக்கப்பட்டு எல்லையற்ற நிலையாக குஷி ஏற்பட்டு விடும். இப்படிப்பட்ட மனநிலையில் உள்ளம் மிக இலேசாக இருக்கும் மற்றும் குஷியின் அலைகளில் மூழ்கி இருப்பார்கள். இது தான் யோகாவிற்கான சாவி ஆகும். இது தெய்வீகமானவர்களாகிய நம் அனைவரின் தந்தையின் மூலம் கிடைத்திருக்கிறது. நல்லது, ஓம்சாந்தி.